**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 418/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | **திரு. தனவேல்** |
| Father's Name/Husband Name: | **திரு. செங்கமலை** |
| Village : | கோவில்பாளையம் |
| Taluk : | **பெரம்பலூர்** |
| Age : | 70 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.08.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் 1, 2, 3 ஆஜர் இல்லை . அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**
**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பாப்பா எனது மனைவி. எதிரிகள் கரும்பாயிரம்,முருகன் மற்றும் அஞ்சலை ஆகியோர்களை தெரியும். எனது மைத்துனர் சுந்தரவடிவேலுக்கு சொந்தமான காடு ஓலைப்பாடி கிராமத்தில் உள்ளது. அந்த காட்டில் நான் விவசாயம் செய்து வருகிறேன். சம்பவத்திற்கு முன்பாக எனது மைத்துனர் சுந்தரவடிவேலும் எதிரிகளுக்கும் இடையே பாதை பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 2019ம் வருடம் 8வது மாதம் வழக்கு சம்பவம் நடந்தது தேதி சரியாக ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்தபோது மாலை சுமார் 6.30 மணியிருக்கும். நானும் எனது மனைவியும் சம்பவம் இடத்தில் பருத்தி விதை விதைத்துவிட்டு வேலி போட்டு அடைத்துவிட்டு வீட்டுக்கு செல்லும் தருவாயில் இருந்தபோது இச்சம்பவம் நடந்தது. எதிரிகள் மூவரும் அங்கு வந்தனர். எதிரி கரும்பாயிரம் அடைத்திருந்த முள்ளை புடுங்கினார். பிறகு நான் ஏன் பிடுங்குகிறாய் பருத்தி விதைகளை ஆடு தின்றுவிடாதா என்று கேட்டேன்.

எதிரிகள் மூவரும் இங்கு வந்த ஏன் அடைக்கிறாய் என்று சொல்லி அசிங்கமாக திட்டினார்கள். தேவிடியா மகனே வெளியூருக்காரன் இங்கு என்னடா வேலை என்று சொல்லி கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். எதிரி கரும்பாயிரம் கட்டையால் என் முதுகிற்கு பின்னால் பேசிக்கொண்டு இருந்தபோது என்னை அடித்துவிட்டார். எதிரி கரும்பாயிரத்தின் அண்ணன் அருகில் இருந்தார். எதிரி கரும்பாயிரத்தின் அண்ணன் மனைவி அசிங்கமாக திட்டினார். இச்சம்பவத்தில் என்னை தவிர எனது மனைவிக்கு காயம் இருந்தது. எனது மனைவியை எதிரி கரும்பாயிரம் கட்டையால் முதுகில் அடித்தார். எனது மைத்துனர் சுந்தரவடிவேல் வந்தவுடன் எதிரிகள் ஓடிவிட்டனர். எங்களை எனது மைத்துனர் சுந்தரவடிவேல் மருத்துவமனையில் சிசிச்சையில் சேர்த்தார். சம்பவம் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல்நிலை சாட்சியத்திலும் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு போலிசார் என்னை வேறு எங்கும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி கரும்பாயிரம் நிலமும் எனது மைத்துனர் சுந்தரவடிவேல் நிலமும் பக்கத்து பக்கத்து நிலம் என்றால் சரிதான். அந்த நிலத்திற்கு ஒரே பாதை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு தனியாக பாதை உள்ளது. நான் எனது மனைவி, மைத்துனர் சுந்தரவடிவேல் ஆகியோர்கள் சேர்ந்து தான் எதிரி கரும்பாயிரத்தின் நிலத்தையும் சேர்த்து வேலி போட்டோம் என்றால் சரிதான். இந்த செய்தி எதிரி முருகனுக்கு தெரிந்து அவர் வந்து கேட்டதால் நீ வேலி போடும்போது இந்த வேலியை நாங்கள் எடுத்துவிடுவோம் என்று சொன்னோம் என்றால் சரிதான். 2வது எதிரி முருகனிடம் நான் சொல்வது போல் வேலி அமைத்துக் கொள்ள ஒப்புதல் எதுவும் நான் கேட்கவும் இல்லை. அவர் எந்த ஒப்புதலும் அளிக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் 40–50 வருடங்களுக்கு முன்பாக நிலங்களை விற்றுவிட்டதால் எனது மைத்துனருக்கு அங்கு நிலம் இல்லை என்றால் சரியல்ல. எனது மைத்துனருக்கு நிலம் இல்லாமல் எதிரிகளின் இடத்தில் வேலி போட்டேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட வேலி போட்டதால் எதிரி கரும்பாயிரம் கேட்டதால் நானும் எனது மைத்தனுரும் அரிவாளால் வெட்டினோம் என்றால் சரியல்ல. நானும் எனதுசுந்தரவடிவேலும் சேர்ந்து எதிரிகளை தாக்கியதால் குன்னம் காவல் நிலையத்தில்

குற்ற எண் 218/2019 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது என்றால் சரியல்ல. மேற்கண்ட குற்ற எண் சம்பந்தமாக நானும் எனது மனைவி எனது மைத்துனர் சுந்தரவடிவேலும் எதிரிகளாக இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆகிறோம் என்றால் சரிதான். நாங்கள் வெட்டியதால் தான் எதிரி கரும்பாயிரம் 108 ஆம்புலன்சு மூலம் மருத்துவமனைக்கு சென்றார் என்றால் சரியல்ல. ஆனால் அவர் 108 ஆம்புலன்சில் போனது உண்மை. நாங்கள் எப்படி மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் எங்களது சொந்த வண்டியில் சென்றோம். யார் யார் போனோம் என்றால் நானும் எனது மனைவியும் மருத்துவமனைக்கு சென்றோம். எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் இரவு 7.30–8.00 மணியிருக்கும். அரசு மருத்துவரிடம் சம்பவம் நடந்த விவரத்தை யார் யார் அடித்தார்கள் என்னென்ன ஆயுதத்தால் அடித்தார்கள் மருத்துவர் கேட்டாரா என்றால் போலிசார் தான் கேட்டார். எதிரி கரும்பாயிரத்தை நான் தாக்கியதால் தான் உடனடியாக 108 ஆம்புலன்சு மூலம் மருத்துவமனைக்கு சென்றதால் தான் வழக்கிற்காக நாங்களும் மருத்துவமனைக்கு சேர்ந்தோம் என்றால் சரியல்ல. எதிரி கரும்பாயிரம் இரவு 6.00 – 7.00 மணிக்கு அரசு மருத்துவனையில் சிகிச்சைக்கு சேர்ந்த பிறகு தான் நாங்கள் இரவு 10,45 மணிக்கு மருத்துவமனைக்கு போய் சேர்ந்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் இரு தரப்பினரும் ஒன்றாக தான் மருத்துவமனைக்கு போய் சேர்ந்தோம். எதிரி கரும்பாயிரம் என்னை முதுகில் அடித்தார் என்று தான் என் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் தாக்கவில்லை நாங்கள் தான் எதிரிகளை தாக்கினோம் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் ஆயுதங்களோட வரவில்லை என்றாலும், நாங்கள் தான் ஆயுதங்களோடு இருந்தோம் என்றாலும் சரியல்ல. எதிரி கரும்பாயிரம் மயக்கநிலையில் இருக்கும்போது தான் 2 மற்றும் 3ம் எதிரிகள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்தவித சம்பவம் நடக்கவில்லை என்றாலும், நான் எதிரி கொடுத்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யா சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.